Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0
பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0
வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 11-1-1947 மார்கழி 27உ { மலர் 14

## விழுப்புரம் முனிசிபல் வரவேற்புப் பத்திரத்திற்குப் பெரியார் ஈ. வெ. ரா. பதில்

அன்புள்ள விழுப்புரம் முனிசிபல் தலைவர் அவர்களே! அங்கத்தினர்களே! விழுப்புரம் நகர தோழர்களே,

இன்று உங்கள் முனிசிபாலிட்டியின் சார்பாக நீங்கள் எனக்கு அளித்த வரவேற்புப் பத்திரத்திற்காக எனது மனமுவந்த நன்றியறிதலைக் காட்டிக் கொள்ளுகிறேன்.

அதில் என்னைப்பற்றி நீங்கள் புகழ்ந்து கூறி இருக்கும் வாக்கியங்கள் என் தகுதிக்கு மேற்பட்ட வாக்கியங்களாகும்.

என்றாலும் அந்த வாக்கியங்களின் மூலம் எனது கொள்கைகளையும், சிறு தொண்டுகளையும் நீங்கள் ஆதரிக்கின்றீர்கள் என்பதை அறிய முடிகிறபடியால் அவற்றை நான் பெருமையோடும், பாராட்டுதலோடும் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் வரவேற்புக்குப் பதில் சொல்லுவது என்பதில் நகர சுயாட்சிமன்றம் என்னும் நகராசபைகளைப்பற்றிச் சிலவார்த்தைகள் சொல்லுவது பொருத்தமானதாக இருக்கலாம் என்று கருதுகிறேன். எனக்கு நகராசபை நிர்வாகத்திலும், அதன் அமைப்பிலும் 40 வருடத்துக்கு மேற்பட்ட அநுபவமுண்டு என்பது உண்மைதான். நீங்கள் கூறி இருப்பதுபோல் நான் முனிசிபல் தலைவராகவும், தாலுகாபோர்டு தலைவராகவும், ஜில்லாபோர்டு அங்கத்தினராகவும் பல வருஷங்கள் இருந்திருக்கிறேன். அவற்றின் நிலைமையிலிருந்து இன்றைய நிலைமையைப்பார்க்கும்போது ஸ்தல சுயாட்சி ஸ்தாபனங்கள் சிறிதும் முற்போக்குடையவில்லை என்றே சொல்லலாம். சில விஷயங்களில் பின்னடைந்து இருக்கின்றன என்றுகூடச் சொல்லலாம். அரசியல் சுயாட்சி உரிமை என்பது நமக்கு இல்லாத காலத்தில் ஸ்தல ஸ்தாபனத்துக்கும், தலைவர், அங்கத்தினர்களுக்கும் இருந்த மதிப்பும் பொறுப்பும், அவற்றால் ஏற்பட்ட நல்ல பயன்களும் அரசியல் சுயாட்சி என்பது ஏற்பட்ட இன்றைய காலத்தில் பின்னடைந்திருப்பதானது சுயாட்சியை நாம் சரியாய்ப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை என்றுதான் அருத்தமாகும்.

முதலில் அதாவது நகர ஆட்சி என்பதாக ஒன்று அரசியலில் தனி இலாகாவாக ஏற்பட்ட காலத்தில் அதில் சுயாட்சி என்பது கிடையாது. அதாவது லோகல் போர்டு முனிசிபாலிட்டி டிபார்ட்டுமெண்டு என்றுதான் சொல்லப்பட்டு வந்தது. பிறகு சிறிது படிப்படியாகச் சுயாட்சி என்று ஏற்பட்டு, இன்று நகராசபை முழுசுயாட்சி (Local Self Government) மன்றமாக ஆகி இருக்கும்போது உள்ள நிலையைப் பார்த்தால் இவைகள் கலைக்கப்பட்டு அரசியல் பொது நிர்வாகத்தில் அதிகப் பொறுப்புள்ள நிர்வாக அதிகாரிகள் ஆதிக்கத்தில் உள்ள மற்ற இலாகாக்களைப் போல் ஒரு இலாகாவாக இருந்தால் நல்லது என்று கருதும்படி இருக்கிறது.

மாகாண தலைப்பு நிர்வாகம் சுயாட்சியாக இருக்கும்போது அதன்கீழ் நிர்வாகமும் சுயாட்சியாக ஆனால் அதற்கு மதிப்பும், சரியான தனிக்கையும், பொறுப்பும் இருக்க முடியாது. இந்தத் தத்துவம் ஒருபுறமிருந்தாலும் இன்றைய ஸ்தலஸ்தாபன சுயாட்சி அடியோடு நாடக மேடையாகவே இருந்துவருவதாகும்.

ஏனெனில் ஸ்தலஸ்தாபனத்தில் சுயாட்சிக்கு இன்று வேலை இல்லை, பொறுப்பு இல்லை, சுதந்திரம் இல்லை. இன்னும் சொல்லப்போனால், சுயாட்சி ஸ்தாபனத்தில் இருக்கும் சிப்பந்திகளிடம்கூட அங்கத்தினர்கள்மீது மதிப்பு இல்லை. மற்றபடி ஸ்தலஸ்தாபன சுயாட்சி மன்றத்தில் இருக்கும் அங்கத்தினர்களுக்குப் பெருமை என்னவென்றால் தங்கள் பெயர்களோடு சேர்த்துப் போட்டுக்கொள்ள ஒரு சிறு பட்டத்திற்கு உதவவும், தாங்கள் வாழ்வை மேம்படுத்திக்கொள்ள பயன் படுத்த உதவவும், சில சுயநலவாதிகளுக்குச் சலுகை காட்டவுமேதான் அந்த சம்பந்தம் பயன்படுவதல்லாமல் வேறொன்றுக்கும் பயன்படாத நிலைமையை எய்திவிட்டது.

உதாரணமாக இன்று ஸ்தலஸ்தாபனத்தில் அங்கத்தினர்கள் சொந்த பொறுப்பைக்கொண்டு, சொந்தப் அநுபவத்தைக்கொண்டு, சொந்த சக்தியைக்கொண்டு செய்யக்கூடிய சுதந்திரக் காரியம் என்ன இருக்கிறது சொல்லுங்கள் பார்க்கலாம்.

என்னையே எடுத்துக்கொள்ளுங்கள், இதில் நான் அநுபவசாலி என்பதோடு இன்று நாட்டிலுள்ள பல கட்சிகளில் ஒரு கட்சியைச் சேர்ந்தவன், இப்படிப்பட்ட நான் என் கட்சியின் பேரால் ஸ்தல ஸ்தாபனத்தில் அங்கம் பெறுகிறேன், என் தலைவனுமாகிறேன் மெஜாரிட்டி கட்சியானாகவும் ஆகிறேன்

என்றே வைத்துக்கொள்ளுங்கள். என்னால் இந்த முனிசிபாலிட்டியில் என்ன செய்யமுடியும்? செய்வதற்கு என்னிடமோ, என் கட்சியினிடமோ ஸ்தலஸ்தாபனத்தில் வேலைசெய்ய என்ன கொள்கை இருக்கிறது? சொல்லுங்கள் பார்க்கலாம். கட்சியின் பேரால் நானோ அல்லது வேறு அந்தக் கட்சியினரானாலும் அவரோ செய்யக் கூடியதெல்லாம் 5, 6 காரியங்கள் தான். அவையாவன:-

1. கட்சித் தலைவர் படத்தை ஆபீசிலும் பள்ளிகளிலும் மாட்டலாம்.

2. கட்சிக்கொடியை ஸ்தாபன சம்பந்தமான கட்டிடங்களில் உயர்த்தலாம்.

3. கட்சிக்காரர்கள் யாராய் இருந்தாலும் வரவேற்புப் பத்திரம் அளிக்கலாம்.

4. கட்சித் தலைவர் பேர்களைப் பார்க்குக்கு, ரோட்டுக்குப் போடவைக்கலாம்.

5. கட்சி சம்பந்தப்பட்டவர்கள் செத்துப் போனால் அநுதாபத் தீர்மானங்களைச் செய்யலாம். அதற்காக ஆபீசு நடவடிக்கைகளை ஒத்தி வைக்கலாம்;

6. நான் அவைகளுக்கு இஷ்டப்படாத மைனாரிட்டியாளனாக இருந்தால் எழுந்து வெளியே போய்விட்டு வரலாம்.

இந்த மாதிரியாகக் கட்சியின் பெருமையைக் காட்டவும், கட்சியைப் பாமர மக்களுக்கு விளம்பரம் செய்யவும் பயன்படுத்த நமக்குச் சௌகரியமும் உரிமையும் இருக்கிறதென்பதல்லாமல் மற்றபடி நாம் செய்யக்கூடிய தனிப்பொறுப்பு, வேலை, கடமை என்ன இருக்கிறது என்று சிந்தித்துப்பாருங்கள்.

இவற்றைத்தவிர மற்றபடி முனிசிபாலிட்டியில் செய்யவேண்டிய அவசியமான காரியங்கள் யாவும் செய்வதற்கு ஏற்கனவே வரையறுத்துச் சட்டம் செய்து அதை நிறைவேற்றத் தனிப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட "அதிகாரி"யையும் மேலிடத்துச் சுயாட்சி மன்றம் ஏற்பாடு செய்தாய் விட்டது. அந்தச் சட்டத்தையும், அதிகாரியையும், அவருக்கும் கீழ் இருக்கும் சிப்பந்திகளையும் நாம்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

திராவிட நாட்டுத் தனிப்பெருந் தலைவர்,

## பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு,

4—1—47 அன்று விழுப்புரம் நகர மன்றம் உவந்தளித்த

# வரவேற்பு வாழ்த்திதழ்

### திராவிட நாட்டுத் தனிப்பெருந் தலைவரே!

வருக! வருக! தங்கள் வரவு நல்வரவாகுக. உயரிய உண்மைக் கொள்கைகளை உலகம் உய்ய என்றும் பரப்பிவரும் பேரறிஞராம் தங்களை வரவேற்று வாழ்த்தும் பேறு பெற்றமைக்கு இம்மன்றம் பெரிதும் மகிழ்கின்றது. தங்கள் நீடு வாழ்க.

### பகுத்தறிவு புகட்டும் பண்புடைப் பெரியீர்!

முற்காலப் பகுத்தறிவு வாதியாகிய கலிலியோ, சாக்ரடீஸ் முதலிய பேரறிஞர்கள் தங்கள் காலத்தில் தூற்றப்பட்டும் பிற்காலத்தில் பெரிதும் போற்றப்பட்டும் வந்தனர் என்பது வரலாற்று உண்மையாகும். தங்கள் பகுத்தறிவுக் கொள்கைகள் எக்காலமும் போற்றப்படும் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை.

தீண்டாமையை அறவே ஒழிக்க அரும்பாடு பட்டீர்கள். அதுபற்றி வைக்கத்தில் போராடி வென்று வைக்கம் வீரரானீர்கள். தற்போதும் நம் நாடெங்கும் கோயில்கள் தாழ்த்தப்பட்டோருக்குத் திறக்கப்பெறுவதற்குத் தங்கள் இயக்கமே காரணம் என்பது மிகையாகாது.

திராவிடநாடு பிரிக்கப்படவேண்டும் என்றும், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்றும் தாங்கள் கூறிய காலை எதிர்ப்புக்கள் பல இருந்தன. தற்போது அரசியல் நிர்ணய சபையில் மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்று பேசப்பட்டு வருகின்றது.

உணவு விடுதிகளில் சாதிக்கொரு தனியிடம் கூடாது என்றும் கூறி வந்தீர்கள். இப்போது அரசியலாரே அதுபற்றிய சட்டங்கள் இயற்றி வருகின்றனர்.

முதல் முதலாக மக்களால் எதிர்க்கப்பட்டு வந்த தங்கள் இயக்கக் கொள்கைகளே தற்காலப் பெரியோர்களால் பேசப்பட்டும் அரசியலாரால் கையாளப்பட்டும் வருகின்றன என்பதைக் காண்கின்றோம்!

### தன்மானத் தந்தையே!

மனிதர் மனிதராக வாழப் பகுத்தறிவை விளக்கினீர்கள். கருத்திற்கொவ்வாத பல புராண இதிகாசக் கதைகளை விளக்கி மக்கள் ஆராய்ச்சிக்கு விட்டீர்கள். சாதி மத சமயப் பிணக்குகளைத் தவிர்க்க வழி கோலினீர்கள். என்று நாட்டில் சமதர்மம், தன்மானம், பகுத்தறிவு, சமரசம் முதலியன விளங்குகின்றனவோ அன்றே நாடு தன்னாட்சி பெறும் எனும் உண்மையை உணர்ந்து அதற்கென உழைக்கும் உங்கள் உழைப்பு பயன் வருவதாக.

### சேந்தமிழறிஞரே!

தமிழ்மொழி வளர்ச்சியே தமிழ் நாட்டின் முன்னேற்றம் எனக்கருதி உழைத்தீர்கள்; வந்த கட்டாய இந்தியைச் சிறைசென்று வெற்றி கண்டீர்கள். அதைத் தமிழுலகம் என்றும் மனம் கொள்ளும்.

### வாழ்க பெரியீர்!

ஈரோடு நகர் மன்றத்தலைவராகப் பல ஆண்டுகளாக அரும்பணிபுரிந்தீர்கள். ருஷ்யா முதலான மேனாடுகளில் சுற்றுப்பயணம் செய்து அரிய கொள்கைகளை அறிந்து வந்தீர்கள்.

பல எதிர்ப்புகளுக்கும் அஞ்சாது கொண்ட கொள்கைகளை இம்முதுமையிலும் பரப்ப உழைத்துவரும் உங்கள் உள்ளத்தின் உறுதியையும், செயலின் வன்மையையும் நினைத்து மகிழ்கின்றோம்.

# வெள்ளகோவிலில் பெரியார்

8-1-47ல் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களும், பி. சண்முகவேலயுதம், குருநாதன், தவமணிராசன், பெருமாள், மணியம்மையார் ஆகிய தோழர்களும் மாலை 3 மணிக்கு வெள்ளகோவில் வந்து சேர்ந்தார்கள். திராவிடக் கழகத்தாரும், கருப்புச்சட்டைப்படைத் தொண்டர்களும் கொடிகளோடு வந்தவர்களை வரவேற்று ட்ராவலர்ஸ் பங்களாவிற்கு அழைத்துச் சென்றனர்.

பிறகு வாத்தியங்களோடு மாலை 4மணிக்கு ஊர்வலம் புறப்பட்டுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நெல்மிஷின் காம்பவுண்டை அடைந்தது. அங்கு பெரியாரும் மற்றவர்களும் சிற்றுண்டியருந்தினார்கள். பின்னர் சில தோழர்கள் பாடியபிறகு தோழர் சண்முகவேலாயுதம் அவர்கள் தலைமையில் கூட்டம் தொடங்கப்பெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பின் பல சங்கங்களின் சார்பில் பெரியாருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டு மாலைகளும் சூட்டப்பட்டன. 101 ரூபாய் திராவிடர் கழக நிதிக்கு நன்கொடையளிக்கப்பட்டது.

பிறகு பெரியார் காங்கரசின் சமுதாயக்கொள்கைகளையும், கிராம புனருத்தாரண கொள்கைகளையும் கண்டித்தும், ஆலயப்பிரவேசத்தால் ஏமாந்துவிடக்கூடாதென்றும், காங்கரசின் அந்தத்திட்டம் நிறைவேறினாலும் பார்ப்பன ஆதிக்கம் ஒழியாதென்றும், சூத்திரப்பட்டமும், பஞ்சமப்பட்டமும் போகாதென்றும், காங்கரஸ் ஆட்சியால் மக்கள் பிரிட்டிஷ் ஆட்சியைவிட மிக மோசமான சுரண்டுதலுக்கும், அடக்குமுறைக்கும், பார்ப்பனக் கொடுங்கோன்மைக்கும் ஆளாகும்படி நேரிடுகின்றதென்றும், அரசியல் நிர்ணயசபையென்பது பார்ப்பன ஆதிக்கத்தைப் பலப்படுத்தும் சபை என்றும், திராவிடர்கள் ஒன்றுசேர்ந்து திராவிடநாட்டைப் பெற உழைக்கவேண்டுமென்றும், ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, சட்டசபை மெம்பர் வேலை, பிளாக் மார்க்கட்டுக்கு லைசன்ஸ் ஆகிய சுயநலங்களுக்காகப் பார்ப்பனர்களுக்கு அடிமையாகவுள்ள திராவிடத் தோழர்களின் வார்த்தைகளைக் கேட்டு ஏமாறக்கூடாதென்றும், திராவிடச்சமுதாயத்தைக் காட்டிக் கொடுத்து கூலிபெறும் விபூஷணன் அனுமான் போன்ற நபர்கள்தான் இன்று காங்கரசிலிருக்கும் திராவிடர்களென்றும், அவர்களை நம்பி மோசம் போகக்கூடாதென்றும் பேசியதோடு, நெல்குத்துவதும் ராட்டினம் சுற்றுவதும் திராவிடமக்களை இழிநிலைமைக்கும் காட்டுமிராண்டித் தன்மைக்கும் அழைத்துப்போகும் சூழ்ச்சியென்றும் விளக்கமாகப் பேசினார். ஆலயப்பிரவேசம் என்பது செடியூல்டு வகுப்பாரையும் சுரண்டி அவர்களது சுயமரியாதை யுணர்ச்சியை ஒழிப்பதற்குச் செய்யும் சூழ்ச்சியென்றும் பல ஆகாரங்களை எடுத்துக்காட்டிப் பேசினார்.

கூட்டத்திற்கு வெளியில் சில காலிகள் நின்றுகொண்டு 'ஜெய்ஹிந்த்' என்று கூச்சலிட்டு மக்களை உள்ளே செல்லவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தனரென்றாலும் கூட்டம் 5000, 6000 பேர்களுக்குமேலாகக் காம்பவுண்டுக்குள் வந்து நிறைந்ததோடு வெளியிலும் ரோட்டுகளிலும் ஏராளமான மக்கள் நின்று கேட்டு மகிழ்ச்சியோடு ஆமோதித்துக்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

என். அர்ச்சுனன், எம். ஆர். சித்தையன் ஆகிய தோழர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து ஒரு தீர்மானமும், சென்னை மந்திரிசபையாரின் மில்லொழிப்புத் திட்டத்தையும், கட்டாயக் கதர் திட்டத்தையும் கண்டித்து ஓர் தீர்மானமும் தோழர் எஸ். வீராசாமி அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன. தோழர் சபாபதி அவர்கள் நன்றி கூறினார்.

பிரபல வியாபாரியும், பெரியாரின் பழைய வியாபார நண்பருமான தோழர் கிருஷ்ணசெட்டியார் கூட்டத்திற்கு வந்து தனது நட்பைக்காட்டிக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

பிறகு இரவு 10 மணிக்குப் பெரியார் தலைமையில் வெள்ளக்கோவில் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டித் தேர்தல் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். கந்தசாமி தலைவராகவும், தோழர் எஸ். வீராசாமி செயலாளராகவும், டி. ஆர். கணபதி பொருளாளராகவும், பி. தங்கவேலு, எஸ். வஜ்ரவேலு, சி. எஸ். தங்கமுத்து, ஆர். சச்சிதானந்தம், ஆர். பாப்பையா, எ. சைமன் ஆகிய தோழர்கள் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

நாடு, மொழி, கலை, நாகரிகம், தன்மானம், பகுத்தறிவு, சமரசம், சமதர்மம், தன்னாட்சி முதலியவற்றிற்காகவே அல்லும் பகலும் உழைக்கும் தாங்களும் தங்கள் இயக்கமும் என்றென்றும் வாழ்க என மனமார வாழ்த்தி இவ்விதழைத் தங்கட்கு அளித்து மகிழ்கின்றோம்,

இங்ஙனம்,

விழுப்புரம் நகர்மன்றத் தலைவரும்,
மற்றைய உறுப்பினர்களும்.

# குடி அரசு

1947 ஆம் ஜனவரீ 11உ

## காங்கரசுக்கு வந்த புதிய ஞானோதயம்

காங்கரசானது சுதந்திர பிரதிக்ஞை என்னும்போரால் தனது வீரப்பையும் பொய் வீரத்தையும் வருஷா வருஷம் காட்டி பாமரமக்களை ஏமாற்றி, பெரும்பாலான மக்களைக் காலிகளாகவும் ஆகச்செய்து வந்தது. காலாடித்தனமும் காலித்தனமும் மக்களுக்குக் குற்றமல்ல, இழிவல்ல என்று தோன்றுவதற்கு ஆகவே "நியாயமும் சமாதானமுமான எல்லா வழிகளையும் பின்பற்றி சுயராஜ்யம் பெறுவது" என்பதைக் காங்கரஸ் கொள்கையாகச் செய்துகொண்டு அவரவர்களுக்கு "நியாயம்" என்று தோன்றும் சகலவிதமான அயோக்கியத்தனமான காரியத்தையும் நாசகரமான காரியத்தையும் செய்து, பொதுமக்களைப் பயந்து நடுங்கும்படியாகப் பலாத்காரத்தையும் கொடுந்துன்பங்களையும் செய்து மக்களை அடிமைப்படுத்தித் தங்களை இந்தியாவின் பிரதிநிதி என்று ஊரார் நினைக்கும்படி காங்கரசார் செய்து ஏமாற்றி வந்தார்கள்.

இதற்கு எடுத்துக்காட்டாகக் காங்கரஸ் "நேரடி நடவடிக்கைப் போராட்டம்" நடத்திய காலங்களிலெல்லாம் மக்களுக்குள் அடிதடி, காயம், துன்பம், உயிர்ச்சேதம், பொருள்சேதம், ஏற்படாமல் இருந்ததே இல்லை என்பதோடு இதைத் தெரிந்தும், பார்த்தும் பிறகும் இந்தப் போராட்டத்தை நடத்தி வந்தது. இதன் பயனாகவே காலாடித்தனத்துக்குப்பின் ஏற்பட்ட ஒவ்வொரு தேர்தல்களிலும் காங்கரசே அதிகவெற்றிபெற்று பதவிகளைக் கைப்பற்றி ஏக போக ஆட்சிசெய்துகொண்டு வந்ததும் யாவரும் அறிந்ததேயாகும்.

இந்தத்தன்மையானது இன்று நாட்டில் பொதுமக்கள் பெரும்பாலோரிடத்தில் நாணயம், ஒழுக்கம், நல்ல நடத்தை என்பதான குணங்கள் மிகமிகக் குறைந்துபோகும்படி செய்துவிட்டதுடன் வஞ்சம், திருட்டு, புரட்டு, பித்தலாட்டம், நம்பிக்கைத் துரோகம் ஏமாற்றுதல் ஆகிய குணங்கள் நீதியாக, சத்தியமாக, சத்தியச் சோதனையாகக் கடவுளை நம்பிய பெரிய பெரிய பக்திமான்களே பஜனைவான்களே, செய்யும்படியாக ஆகிவிட்டது.

இந்த நிலையை சரிவர அறிந்த வெள்ளையன் இப்படிப்பட்ட கூட்டத் தலைவர்களிடையே ஒரு இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டு அதிகாரத்தைக் குத்தகைக்கு ஒப்படைத்துவிட்டு வேடிக்கைப் பார்க்கிறான். அதிகாரங்கள் காலித்தனத்துக்கும், புரட்டுப் பித்தலாட்டங்களுக்கும் சன்மானமாக தங்கள் கைக்கு வந்தவுடன் வேறு யாராவது இந்த மாதிரி "நீதியும் சமாதானமுமான" முறையில் போராட்டம் நடத்தித் தங்களை எங்குத் தோற்கடித்துவிடுவார்களோ என்று பயந்து இப்போது நீதியும் சமாதானமும் என்கின்ற வார்த்தைகளுக்குப் பதிலாகச் "சட்டபூர்வமான (சட்டத்திற்குக் கட்டுப்பட்ட) முறைகளைக் கையாள வேண்டு"மென்றும், "சட்டத்திற்குக் கட்டுப்பட்டுக் கிளர்ச்சி செய்வதன்மூலமே நாடு விடுதலை அடைய முடியும்" என்றும் கொள்கை வகுத்துக் கொள்ள தொடங்கி விட்டார்கள்.

1947ம் வருட சுதந்திரப் பிரதிக்ஞையில் இந்த வார்த்தைகளைப் புகுத்திஇருக்கிறார்கள். இது 8-1-47ந் தேதி தினசரி பத்திரிக்கைகளில் இருக்கின்றன.

இதன் கருத்து என்னஎன்று பார்த்தால் தாங்கள் கிளர்ச்சி செய்வதாய் இருந்தால் எவ்விதமான காலாடித்தனமும் அதாவது தண்டவாளம் பெயர்த்து இரயிலைக் கவிழ்ப்பது, தந்திகம்பி அறுத்து சேதிகளைத் தடுப்பது, கட்டிடங்களை இடித்துச் சொத்துக்களை நாசமாக்குவது, நெருப்புவைத்து ரிகார்டுகளைக் கொளுத்துவது, குத்தி, சுட்டு, திராவகம் ஊற்றி மக்களையும், அதிகாரிகளையும் கொல்லுவது ஆன காரியங்கள் செய்யலாம் என்பதுடன் இப்படிப்பட்ட காரியங்களால் தாங்கள் பதவிக்கு வந்தவுடன் இம்மாதிரியான காரியங்கள் தாங்கள் செய்யும்போது தடுத்து அடக்கியவர்களைப் பழிவாங்கப் போகிறோம் என்று பேசுவதுமாக நீதியற்ற, ஒழுக்கமற்ற, பேச்சைப் பேசிவிட்டு இப்போது தங்கள் அதிகாரத்தில் மற்றவர்கள் இப்படிச் செய்து தங்களை எங்கு அதிகாரத்தைவிட்டு இழுத்துவிட்டு விடுவார்களோ என்று பயந்து, இனிக் கிளர்ச்சிசெய்கிறவர்கள் "சட்டத்திற்கு உட்பட்டு கிளர்ச்சிசெய்யவேண்டும்" என்று சொல்லுகிறார்கள் என்று தானே அர்த்தம். இப்போது இவர்கள் இப்படிச் சொன்னால் இதை யார் கேட்பார்கள்? இந்தமாதிரியான காங்கரஸ்தலைவர்களே பதவிக்கு வந்தவுடன் 'ஆகஸ்டு வீரச்செய்கைகளால்தான் வெள்ளையன் சுதந்தரத்தை நம்மிடம் ஒப்புக்கொடுத்து விட்டான்" என்று சொல்லிவிட்டு அதே வாயால் "சட்டத்துக்குக் கட்

டுப்பட்டு நடந்தால்தான் சுதந்திரம் வரும்" என்று சொன்னால் இதை நேர்மையான யோக்கியமான பேச்சு என்று எந்தக் குருட்டுக்கிழவிதான் நம்புவாள்?

காங்கரசார் பதவிக்கு வந்தவுடன் அவர்கள் (காங்கரசார்) பதவிக்குவரப் பயன்படுத்திய காரியத்தையே மற்றவர்களும் இவர்களிடம் இருந்து சமாளிக்க, பயன்படுத்த ஆரம்பித்து, இலட்சக்கணக்கான மக்கள் துன்பம், தொல்லை, குத்து, வெட்டு, சாவுகளுக்கு ஆளாகிவிட்டார்கள். கோடிக்கணக்கான ரூபாய்கள், சொத்துகள் நாசமாக்கப்பட்டுவிட்டன. இப்படி நாடெங்கும் நடந்து நாசமும் சாவும் தங்களை நெருங்கிக்கொண்டு வரும்போது இன்று கடவுளைப் பிரார்த்திப்பதும், கடவுளிடம் நம்பிக்கை வைக்கும்படி பிரசாரம் செய்வதும், சட்டங்களுக்கு அடங்கி நடவுங்கள் என்பதும், எப்படித்தான் சிறிதும் மானம், வெட்கம், யோசனை இல்லாமல் தலைவர்கள் என்பவர்கள் பேசுகிறார்கள் என்பதும், இந்தப் புதியஞானம் ஏன் என்பதும் நமக்குப்புரியவில்லை.

வங்காளம் இரணகளமானது யாரால்? எந்த உபதேசத்தால்? பீஹார் இரணகளரி ஆனது யாரால்? எந்த உபதேசத்தால்? பம்பாய் 'தினமும் முயல்வேட்டைபோல் வேட்டை ஆடப்பட்டு மக்கள் அவதிப்படுவது யாரால்? எந்த உபதேசத்தால்? கரூர், மதுரை, சேலம், ராமநாதபுரம், பாப்பாரப்பட்டி, வாணியம்பாடி முதலிய ஊர்களில் இனியும்கூட மக்களின் காலாடித்தனமும், அதிகாரிகளின் அயோக்கியத்தனமும் நடப்பதும். அவைகளுக்குப் பெரும்பலும் கேள்விப்பாடு இல்லாமல் இருப்பதும் யாரால்? எந்த உபதேசத்தால்? என்று கேட்பதோடு தலைவர்கள் என்பவர்களை மற்றொன்றும் கேட்டுவிட்டு இதை முடிக்கிறோம்.

"வாளுக்கு வாள்" என்றவாய் என்ன ஆயிற்று? "உங்களுக்கு இஷ்டமில்லாத காரியத்திற்கு இணங்கவேண்டுமானால் உயிரை விடுங்கள், ஒரு கை பாருங்கள்" என்று சொல்லி மக்களைத் தூண்டிவிட்ட பிரார்த்தனை உபதேசங்கள் என்ன ஆயிற்று? "இரண்டில் ஒன்று பார்த்துவிடுவதுதான் நமது இறுதித் திட்டம். தயாராகுங்கள் இறுதிப்போராட்டத்திற்கு" என்று வீரப்பிரதாபம் பேசிய "வீர கர்ஜனைகள்" என்ன ஆயின? "சட்டப்படிச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்" என்பது சொல்லுபவர்களின் நாணயமான யோக்கிய பேச்சாய் இருக்குமானால் அப்படிப்பட்ட நாணயஸ்தர்கள் வாயில் அந்த (முன் குறிப்பிட்ட) பேச்சுகள் வந்திருக்கமுடியுமா? என்று சிந்தித்துப்பார்க்க வாசகர்களை வேண்டுகிறோம்.

வங்காளத்திலும், பீஹாரிலும், பம்பாயிலும் நியாயமும், சமாதானமுமான காரியத்தின் பலனைத் தெரிந்துகொண்டு பயந்து நடுங்கி, தலைமறைவாகத் திரியவேண்டிய அவசியம் ஏற்பட்ட பிறகே சட்டம் சங்கதி தலைவர்களுக்கு ஞாபகம் வந்திருக்கலாம் என்றே நாம் கருதுகிறோம்.

முடிவில் "கடவுள் சித்தம்' என்று இருப்பதால் அதில் நம்பிக்கை உள்ளவர்கள், அதன் பேரால் பேசுகிறவர்கள் எதுவும் பேசலாம். ஆதலால் இப்படிப்பேசுவது கடவுள்செயலே ஒழிய பேசுகிறவர்களது செயல் என்று கருதமாட்டார்கள்.

---

## நன்றி கெட்ட செயல்

ஜனசக்தி பிரசுராலயத்தால் வெளியிடப்பட்ட 'தென்னிந்திய ரயில்வே தொழிலாளரின் மகத்தான போராட்டம்' என்ற நூலைப் பார்வையிட்டோம். தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்கள் நடத்திய மாபெரும் போராட்டத்தைப்பற்றித் தொடக்கம் முதல் இறுதிவரை விளக்கப்பட்டுள்ளது அந்நூலில். பிரகாசம் பந்துலுகாருவின் கொடுங்கோல் ஆட்சியில் நடைபெற்ற அக்கிரமங்கள் விளக்கமாகத் தீட்டப்பட்டுள்ளன. மலபார் போலீசாரின் மிருகத்தனமான செயல் நன்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இவை யாவும் யாவரும் படித்து அறிந்து கொள்ள வேண்டியவைகளே. அதுமாத்திரமின்றி அந்நூலை எழுதியவரும் பாராட்டுதலுக்குரியவர்தான்.

ஆனால் நாம் அந்நூலைப் படித்த பின்னர் 'கம்யூனிஸ்ட்கள் நன்றி கெட்டவர்கள்' என்று நாம் இதுவரையில் அரைகுறையாகக் கருதிக் கொண்டிருந்தது முற்றிலும் உண்மை என்ற முடிவுக்கு வந்து விட்டோம்.

தென்னிந்திய ரயில்வே போராட்டம் உரிமைக்காகத்தான் தொடங்கப்பட்டது என்ற காரணத்தால் திராவிடர் கழகத்தினர் போராட்டத்திற்கு முழு ஆதரவு காட்டினர் அதுமாத்திரமன்றி போராட்டத்திலே பல திராவிடர் கழகத் தோழர்கள் கலந்துகொண்டு, போராட்டத்தில் எல்லோருக்கும் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களில் பங்கும் கொண்டனர்.

மலபார் போலீசாரின் அடக்கு முறையால் பாதிக்கப்பட்ட (வேலை நிறுத்தம் செய்த) தொழிலாளர்கள் மனச்

சோர்வுற்று வேலைக்குத் திரும்பலாமா என்று சிந்தித்துக் கொண்டிருந்த நேரத்தில் அவர்கள் மனவுறுதி கொண்டு போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஊக்கம் கொடுத்தவர்கள் ஈரோட்டுத் திராவிடர் கழகத்தினர் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

பொன்மலையிலே நூற்றுக்கணக்கான திராவிடர் கழகத் தோழர்கள் போராட்டத்தில் பங்கு கொண்டு பெரும்பணியாற்றியுள்ளார்கள். ஈரோடு, பொன்மலை முதலிய இடங்களில் கம்யூனிஸ்ட் கட்சியினரும், திராவிடர்கழகத்தினரும் ஒன்று சேர்ந்து சர்வகட்சிக் கூட்டம் போட்டு இரயில்வே போராட்டத்தை ஆதரித்துள்ளனர். திராவிடர் கழகத்தின் சார்பிலும் பல ஊர்களில் பொதுக் கூட்டம் போட்டுப் போராட்டத்தை ஆதரித்துள்ளனர். திராவிடர்கழகத்திலுள்ள தலைவர்கள் யாவரும் தெ.இ.ர. போராட்டத்தை ஆதரித்துவந்துள்ளனர். திராவிட தினசரியாகிய 'விடுதலை'யும், வார வெளியீடுகளாகிய "திராவிடநாடு", "குடிஅரசு" முதலிய ஏடுகளும் இரயில்வே போராட்டத்தை ஆதரித்துள்ளன. அது மாத்திரமின்றி இரயில்வே தொழிலாளர்கள் மேற் கொண்ட போராட்டத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்பதற்காக உணர்ச்சியூட்டக் கூடிய பல தலையங்கங்களும், கட்டுரைகளும் எழுதின.

அதே நேரத்தில் பொய்ப்பிரசாரம் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள தேசிய ஏடுகளும், தேசியத்தலைவர்களும், போராட்டத்தைக் கண்டித்து எழுதியும், பேசியும் வந்தமை உலகமறிந்த செய்தி.

இம்முறையில் பல வகையில் திராவிடர்கழகத்தினர் போராட்டத்திற்கு ஆதரவு காட்டினர். ஆனால் போராட்டத்தைப் பற்றி எழுதப்பட்ட (ஜனசக்தி பிரசுராலயத்தால் வெளியிடப்பட்ட) நூலில் திராவிடர் கழகம் போராட்டத்தில் பங்கு கொண்ட வரலாற்றைப்பற்றி ஒரு வரிகூட எழுதப்படவில்லை இச்செயலை நன்றி கெட்ட செயல் என்று குறிப்பிடுவதைத் தவிர வேறு எப்படிக் குறிப்பிடுவது?

ஆனால் கம்யூனிஸ்ட்கட்சியையே அடியோடு தொலைக்கக் கட்டுவதற்குத் திட்டம் தீட்டி வேலை செய்துவரும் காங்கரஸ் கட்சியைத் தங்கள் தாய் ஸ்தாபனம் என்று கூறி பெருமைபடுவதில் கம்யூனிஸ்ட் கட்சியினர் பின் வாங்குவதில்லை. மேலும் காங்கரஸ் கட்சிக்குப் பெருவாரியான செல்வாக்கு இருக்கக்கூடிய இடங்களில் காங்கரஸுக்கே தேர்தலில் ஆதரவு காட்ட வேண்டுமென்பது இவ் வெளவால் குணம் படைத்த கம்யூனிஸ்ட் கட்சியினரின் தலைசிறந்த கொள்கையாகும்.

உதைக்கும் காலுக்கு முத்தமிடும் இவர்களின் கொள்கை பெரிதும் பாராட்டக் கூடியது தான். ஆனால் அவ்வுதைக்குங் கால் இவர்கள் ஸ்தாபனத்தையே தொலைத்துக் கட்டிவிடும் போலிருக்கின்றதே. இது ஏன் அவர்களுக்குத் தெரியவில்லையோ யாம் அறியோம். என்றாலும் இவர்களுக்கு ஆதரவு காட்டும் திராவிடர் கழகத்தினரைப் பற்றிப் பொருட்படுத்தாத இவர்களின் நிலை வருங்காலத்தில் மிகவும் பரிதாபப்படக் கூடியதாய் விடுமோ என்று அஞ்சுகிறோம்.

## பொங்கல் திருநாள்

ஆண்டுதோறும் தைத் திங்கள் தலைநாளன்று பொங்கல் திருநாள் தமிழ்நாடெங்கும் கொண்டாடப்படுகின்றது. பண்டைக்காலந் தொட்டுத் தமிழர்கள் கொண்டாடி வரும் பண்டிகை பொங்கல் திருநாள் ஒன்று தான் என்று கூறலாம். அத்திருநாள் உழைப்பாளிகளுக்கு, சிறப்பாக உழவர்களுக்கு உரியது என்றும் கூறலாம். அன்றுதான் உழவர்கள் உழைத்ததால் பெற்ற பயனை உற்றார் உறவினருடன் துய்ப்பர்.

புதிதாக விளைந்த அரிசியைக் கொண்டு செய்யப்பட்ட பொங்கலை உண்ணும்பொழுது உழவன் தான் காலமெல்லாம் பட்ட அல்லலை மறந்து உவகையடைகிறான்.

"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்பது வள்ளுவரின் அருள்மொழி. இதிலிருந்து பண்டைத் தமிழகத்தில் உழவர்கள் பெரிதும் போற்றப்பட்டு வந்துள்ளனர் என்பது புலனாகும். மக்கள் உயிருடன் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருள்களை உழவன் உண்டாக்குகின்ற காரணத்தாலேயே பண்டைக்காலத்தில் அவன் போற்றப்பட்டுள்ளான்.

ஆனால் இக்காலத்தில் உழவர்கள் அடிமைகளாக மதிக்கப்படுகின்றனர். உழவர்கள் உழைக்கின்றனர். ஆனால் உழைப்புக்குத் தக்க ஊதியம் பெறுவதில்லை. பாடுபடுகின்றனர் ஆனால் பசியாற உணவு உண்ணுவதில்லை. இதற்கெல்லாம் காரணம் யாது? பண்டைக் காலத்தில் போற்றப்பட்டு வந்த உழவர்கள் இன்று நாட்டுப்புறத்தான் என்று இகழப்படுவானேன்? உலகம் உய்வடைய வழி தேடும் உழவன் ஒரு கூட்டத்தாருக்கு அடிமையாயிருப்பதேன்?

நாட்டின் கண்ணுள்ள நிலங்களெல்லாம் 'அட்டை'க் குணம் படைத்த ஒரு சிறு கூட்டத்தினர் கைக்குள் சிக்குண்டு கிடக்கின்றன. வெய்யில் என்றும் மழையென்றும், பனியென்றும் பாராது உழைக்கும் உழவன் அந்த நிலக்கிழவர்களால் புறக்கணிக்கப்படுகின்றான். கைகட்டி, பல்லைக்காட்டி, வறுமையை எடுத்துக்கூறி தன் உழைப்பிற்குத்தக்க ஊதியம் கொடுங்கள் என்று கேட்கும் உழவனுக்கு நிலக்கிழவர்கள் கொடுக்கும் ஊதியம் சில இழி சொற்கள் தான். ஏன் இந்நிலைமை இந்நாட்டில்? இந்நிலைமை மாறவேண்டாமா?

உழவர்களின் திருநாளாகிய பொங்கல் நாளன்று தமிழர்கள் அனைவரும்

ரோஜா முத்தையா

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னமாதிரி செய், இன்னமாதிரி நட, என்பதாகக்கூட நிர்வாகம் செய்ய நமக்குத் தகுதியில்லை. சட்டப்படிதான் நிர்வாகத்தை நடத்தியாக வேண்டும். அந்தச் சட்டம் செய்பவர்கள் கூட நாம் (கௌன்சில்) அல்ல. இந்த நிலையில் இது நமக்கு நாடகமல்லாமல், வேறு ஒரு யோக்கியதையும் இல்லாதவர்களுக்கு ஒரு யோக்கியதாம்சமல்லாமல் வேறு பெருமை, பொறுப்பு சுதந்திரம் என்ன என்று பாருங்கள்.

வீதி கூட்டுவது, விளக்குப் போடுவது, வாத்தியார்களுக்குச் சம்பளம் கொடுப்பது, வரிவசூல் செய்வது இவைதான் முனிசிபாலிட்டியின் முக்கியவேலையாய் இருந்து வருகின்றன. இந்த வேலைகள் தலைவர், கௌன்சிலர்கள் இருந்தாலும் நடக்கும் இல்லாவிட்டாலும் நடக்கும். அன்றியும் இவைகளிடமோ இவைகளின் சிப்பந்திகளிடமோ கவுன்சிலர், சேர்மென் ஆகியவர்களுக்கு நேரிட சம்பந்தமோ அதிகாரமோ இல்லை. நிர்வாக அதிகாரியிடமும் கவுன்சிலுக்கு அதிகாரம் செலுத்த முடியாது.

மேலிடத்துச் சுயாட்சியில் இருப்பவர்கள் நம்மிடத்துக்கு வந்தால் அவர்களை வரவேற்று விருந்து செய்து அவர்கள் தயவுபெற்று நம் சொந்த காரியம் ஏதாவது செய்துகொள்ளலாம் என்பதையும் தவிர மேலிடத்தாருக்கும் நமக்கு (கவுன்சிலுக்கு)மாவது என்ன உறவு இருக்கிறது?

இவைகளை உணர்ந்தே தான் தாலுக்கா போர்டுகளைக் கலைத்துவிட நான் பெருமுயற்சி செய்ததோடு முனிசிபாலிட்டி ஜில்லா போர்டுகளையும் கலைத்துவிட வேண்டுமென்று பல பொறுப்பு வாய்ந்த தலைவர்களோடு பேசி ஒரு முடிவுக்கு வந்தோம்.

ஆனால் இப்போது இந்த ஸ்தாபனங்கள் அதிகாரத்தில் இருப்பவர்கள் கட்சிகளைக் காப்பாற்றிக் கொள்ளவும், கட்சி மந்திரிகளின் சுற்றுப்பிரயாணத்தில் வரவேற்க ஆள்கள் இருக்கவேண்டிய அவசியத்திற்கும் கண்டிப்பாகத் தேவை இருக்கிறது என்று பட்டதால், ஸ்தலஸ்தாபன சுயாட்சி என்னும் பேரால் இந்த நாடகம் நடக்கப்படவேண்டியதாக இருக்கிறது. தேர்தல் தொல்லை, தேர்தல் செலவு, இவைகளால் உள்ளூர்களில் கட்சிப்பிரிவு என்பவைகளுக்கு ஏற்ற பலன் என்ன? மக்களுக்கு லாபம் என்ன? நகர முற்போக்கு என்ன? என்று பாருங்கள்.

சாமான்கள் கிடைக்காத காரணத்தால் சில நல்லவர்களும்கூட கள்ள மார்க்கட்டில் சாமான் வாங்கவேண்டிய அவசியத்திற்கு ஆளாவதுபோல் நியாயமான நீதி கிடைக்க வழி இல்லாததால் தப்பான முறையில் நீதி பெற சில நல்லவர்கள் மானமுள்ளவர்கள் கூட இந்த மாதிரியான ஸ்தலஸ்தாபனங்களில் கலந்துகொள்ள வேண்டியதாக ஆகிவிடுகிறது.

ஸ்தலஸ்தாபனங்கள் ஏற்பட்டு 50 வருடத்துக்கு மேற்பட்டு 75 வருடம் வரை ஆகியும், ஸ்தல கல்வி, சுதந்திரம், ஸ்தலஸ்தாபனங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டதாக இருந்தும் பொதுமக்களில் கல்வி கற்றவர் எண்ணிக்கை இன்று என்ன என்று பாருங்கள். 100க்கு 11வீதம் தானே இன்றைய கணக்கு? ஆகவே ஸ்தலஸ்தாபனக் கல்வி கொள்கை மக்களிடம் அடித்துப் பிடித்து வரிவசூல் செய்து உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் கொடுத்து வருவதைத் தவிர அதாவது மக்களில் ஒரு கூட்ட மக்களை வாத்தியார் வேலையில் வயிறு பிழைக்கச் செய்வதைத் தவிர வரிகொடுப்பவரின் மக்களைப் படிக்கவைக்க அல்ல என்பது ஸ்தலஸ்தாபனக் கல்விக் கொள்கை என்பதாகத் தெரியவில்லையா என்று கேட்கிறேன். உபாத்தியாயர்கள் கூட சம்பளம் போதவில்லை என்று கேட்கிறார்கள். அதை ஸ்தலஸ்தாபனம், சுயஆட்சி அரசியல் ஸ்தாபனம் கேட்டு ஒரு அளவாவது உடனே பரிகாரம் செய்கிறது. ஆனால் கல்விக்கு என்று வரிகொடுப்பவர்கள் வரிதான் கொடுக்கமுடிகிறதே தவிர தங்கள் மக்கள் படிப்பிக்கப்பட்டு ஆக வேண்டும் என்று கேட்கமுடிவதில்லை, என்றாலும் மக்கள் யாவரும் படித்தாகவேண்டும் என்று கருதத், திட்டம் செய்ய, நடத்த மேலிடத்து சுயாட்சி ஸ்தாபனத்தாருக்கும் ஸ்தல சுயாட்சி ஸ்தாபனத்தாருக்கும் முடிவதில்லை. இதற்குப் பெயரா ஸ்தல சுயாட்சி? என்று கேட்கிறேன்.

ஒரு ஸ்தல சுயாட்சிக்கு உட்பட்ட ஸ்தலத்திற்குள் எத்தனைபேர் வேண்டுமானாலும் பித்தலாட்ட வியாபாரம் செய்து கொள்ளலாபம் அடிக்கலாம், கெட்ட பண்டத்தை நல்ல பண்டம் என்று விற்கலாம், முக்கால் அளவுள்ள அளவுக் கருவி எடைக்கருவிகளால் சாமான்கள் விற்கலாம். ஒரு தாசில்தார் லஞ்சம் வாங்கலாம், ஒரு மூன்சீப் லஞ்சம் வாங்கலாம், ஒரு மேஜிஸ்ட்ரேட் லஞ்சம் வாங்கலாம், பட்டி ஆடுகள்போல் கொசகொசவென்று வக்கீல்கள், டாக்டர்கள், வந்துசேர்ந்து ஊரை நாசமாக்கி, கொள்ளை அடித்து மாதம் 1000, 2000, 5000 மூட்டை கட்டலாம், போலீசு அட்டூழியம் செய்யலாம், மார்வாடி, முல்தானி கொடுமை வட்டிவாங்கி மூட்டை கட்டிச் செல்லலாம், இவைகளைக் கேட்க அந்த ஸ்தலஸ்தாபன சுயாட்சிக்கு, மன்றத்துக்கு அதிகாரமில்லை என்றால் விபசாரிக்குத் தேவர் அடியாள் என்கின்ற பெயர் இருப்பது போல் அக்கிரமங்களை, அநீதிகளைப், புரட்டு பித்தலாட்டங்களைப்பற்றிச் சிந்திக்கக்கூட முடியாத தன்மைக்கு ஸ்தல சுயாட்சி என்று பெயர் என்று தானே சொல்லவேண்டும்?

மக்களுக்கு இன்று இருந்துவரும் தொல்லைகள் பெரிதும் வியாபாரிகளால், அதிகாரிகளால், வக்கீல்களால் என்பதல்லாமல் வேறு எதனால் என்று கேட்கிறேன். சுயாட்சி என்றால் இத்தொல்லைகளைக் குறைக்கவேண்டாமா?

மேல்நாட்டில் நான் சுற்றுப்பிரயாணம் செய்த சில இடங்களில் போலீஸ், முன்சீப், மேஜிஸ்ட்ரேட்டு ஜில்லா ஜட்ஜு முதலியவர்கள் ஸ்தலஸ்தாபன சிப்பந்திகள் ஆவார்கள். முன்சீபும், ஜட்ஜியும், மேஜிஸ்ட்ரேட்டும், போலீஸ் அதிகாரியும் அந்தந்த ஸ்தலஸ்தாபன நிர்வாகத்தின் நேரடியான சிப்பந்திகளாவார்கள். இங்கு ஒரு சூபர்வைசர், ஓவர்சியர், சேர்மனையும், டிஸ்டிரிக்ட்போர்டு பிரசிடெண்டையும் 'வேலை தெரியாத நற்குறிகள்'' என்று அதிகப்பிரசங்கமாய் பேசுவார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால் ஸ்தலஸ்தாபனத்துக்கு மதிப்பு இல்லை என்றுதானே அருதத

---

உழவர்களின் அடிமைத்தனத்தைப் போக்கத்திட்டம் தீட்டி அதற்காவன புரிதல் வேண்டும்.

மாகும். ஆனால் மேலிடத்து சுயாட்சிக்குக் கட்டுப்பட்ட ஒரு சீப் (Chief) என்ஜினீயர் "மாமமத்து இலாகா மந்திரி தற்குறி" என்று அதிகப்பிரசங்கமாகப் பேசமாட்டார். சுகாதார மந்திரி தற்குறி என்று ஒரு டாக்டர் பேச மாட்டார் இதற்குக் காரணம் அந்த ஸ்தாபனத்துக்கு மதிப்பு இருக்கிறது. சீப் என்ஜினியரும் டாக்டரும் மந்திரி செய்த உத்திரவுக்குமேல் எந்த ஆபீசுக்கும், சலுகைக்கு, சிபார்சுக்குப் போகமுடியாது. போக இடமுமில்லை ஆகவே சுயாட்சி என்றால் அப்படி இருக்கவேண்டும். மதிப்பும் சுயமரியாதையும் உள்ள ஆட்சியாக இருக்க வேண்டும்.

ஸ்தல சுயாட்சி என்பது மக்கள் வரிப்பணத்தையே நம்பி இருக்கக் கூடாது. தொழில்களை, வியாபாரங்களை, போக்குவரத்து சவுகரியங்களை ஸ்தல சுயாட்சியே நடத்தி வியாபாரிகள் கொள்ளையை நீக்கிச் சம்பாதித்து அதை நிர்வாகச் செலவுக்குப் பயன்படுத்த வேண்டும் ஸ்தல ஸ்தாபன எல்லைக்குள் இருக்கும் பொதுமக்களுக்குள் ஏற்படும் விவகாரங்களைத் தனிப்பட்ட வக்கீல்கள் நடத்தி மக்களை [illegible] வாறு செய்யவும் [illegible] குறிப்பிட்ட சில வக்கீல்களை [illegible] பனத்துக்கு அமர்த்தி அவர்களைக் கொண்டு நோட் போட்டு வைக்கச்செய்து நிர்வாக முறையில் வழக்குகளை நியாயப்படி தீர்த்து வீண் செலவையும் அனாவசிய அலைக்கழிப்பையும் நாணயக் குறைவைப் பழக்குவதையும் மக்களுக்கு இல்லாமல் செய்யவேண்டும்.

சுய ஆட்சி என்றால் நல்ல ஆட்சி என்பதாக இருக்கவேண்டும் நல்ல ஆட்சி என்பது மக்களுக்குக் கவலை, மனக்குறை, தொல்லை, சுரண்டப்படுதல் முதலியவை இல்லாமல் இருக்க வேண்டும். நம ஸ்தல சுயாட்சிகளில் அவைகள் இல்லாமல் இருப்பது மிக மிகக் குறைவாக இருக்கின்றன. ஆனால் சிபாரிசுகளும் சம்பளங்களும் அதிகமாகிக்கொண்டு வருகின்றன.

சௌகரியங்கள், கவலை அற்றத் தன்மைகள் குறைந்துகொண்டே வருகின்றன. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் நகரங்களைப் பெரிய

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

பெரியார் அவர்கள் 11-1-47ல் சூலூரிலும், 12-1-47ல் கோயம்புத்தூரிலும் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு 13-1-47 காலை ஈரோடு வருவார்கள்.

## "ஜஸ்டிஸைட்" வாசகர்களுக்கு

எதிர்பாராத அசந்தர்ப்பங்களால் இந்த வாரம் ஜஸ்டிஸைட் வெளியிட இயலவில்லை. அடுத்த வாரத்திலிருந்து வழக்கம்போல் ஜஸ்டிஸைட் வெளிவரும் என்று அறிவித்துக் கொள்கிறோம்.

---

தாக்கிக் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட நகரத்தைப் பல காரியங்களில் ஒரு சுதந்திரத் தனிநாடாக, ஒரு தனி அரசுப் பிரதேசமாக ஆக்கிவிட வேண்டும்.

மக்களுக்குக் கவலையற்றத் தன்மை, பயமற்றத் தன்மை நித்திய வாழ்க்கையில் மனக்கஷ்டம், ஏமாற்றமடைந்ததாகத் துயரம் இல்லாத தன்மைகள், ஒருவரை ஒருவர் ஏமாற்ற [illegible] இல்லாத தன்மைகள் நிலவ [illegible] பாடுபடாமல், நேர்மை [illegible] கருப்பு இல்லாமல், பாமரசாது மக்களைப் படித்தவன், பணக்காரன், அதிகாரிகள், பாடுபடாத சோம்பேறிகள் என்பவர்கள் தொல்லை கொடுக்காமல் இருக்கும்படி ஆட்சி இருக்கவேண்டும். பொறுப்பற்றவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்துக் கொள்ளை அடிக்க வைத்து, பொறுப்புள்ள போலீசு, கணக்கு, மணியம் போன்ற வேலைகளுக்கு மிக மிகக் குறைந்த சம்பளம் கொடுத்து அவர்களது தேவைகளைப் பொதுமக்களிடம் இருந்து தப்பு வழிகளில் கவர்ந்து வாழும்படிச் செய்வது சுயாட்சி ஆகாது. ஏதோ ஒன்று இரண்டு, அல்லது மூன்று காரியங்களில் ஸ்தல சுயஆட்சி எல்லைக்கு வெளியில் இருக்கும் மேலிடத்துச் சுயாட்சிக்கு சம்பந்தம், அதிகாரம் இருக்கலாம். மற்றவை யாவும் ஸ்தல சுயாட்சிக்கே இருக்கவேண்டும். அந்த ஆட்சி பொறுப்புள்ளவர்கள் இடம் இருக்கும்படியும்

ஸ்தல சுயஆட்சி யந்திரம் ஒழுங்காகவும் சுலபமாகவும் வேலை செய்யும்படியும் பார்த்துக்கொள்ள வேண்டும், கௌரவத்திற்குத், தயவுக்கு யாரும் வேலை பார்க்கக்கூடாது. ஊதியம் கொடுத்து வேலை வாங்கவேண்டும். பொறுப்புக்கே, கடமைக்கே யாரும் வேலை செய்யவேண்டும். கவுரவ வேலை ஸ்தாபனங்களில் நாணயம், பொறுப்பு, கட்டுப்பாடு ஆகியவை குறைவாகத்தான் இருக்கும். "கௌரவ"த்திற்கு இவை இயற்கையேயாகும். கவுரவத்திற்கு வேலை பார்ப்பவர்கள் தப்பான வழியில் பயன் அடைய வசதிதேடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிவிடுவார்கள்.

கிராமப் பெரியதனக்காரர்களுக்குச் சம்பளமில்லை; அல்லது மிகக் குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஏன் என்று சர்க்காரைக்கேட்டால் கிராமாதிகாரிகள் "கௌரவ அதிகாரிகள், பெரியதனக்காரர்கள்" என்று பதில் சொல்லிவிடுகிறார்கள். ஆனால் அதில் 100க்கு 99க்கு மேம்பட்டவர்கள் எப்படி இருக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்? அவர்கள் அதிகமாக அடையும் ஊதியம் நேர்மையாய் நடப்பதால் பெறமுடியுமா? சிந்தித்துப்பாருங்கள். அதுபோல் தான் இம்மாதிரி சுயாதிக்கம், கௌரவபதவிகள் வெகு தூரத்திற்குத் திருத்தப்பாடு அடைய வேண்டி இருக்கிறது என்பதோடு இன்றைய நிலையில் பலஜாதி, பல மதம், பல கட்சி, பலதரப்பட்ட மக்கள் உள்ள நம் நாட்டிற்கு வெகு ஜாக்கிரதையான புத்திசாலித்தன சுயஆட்சி ஏற்பாடு செய்யப்பட வேண்டியதும் அவசியமாய் இருக்கிறது.

ஆனால் இந்த விழுப்புரத்தைப் பொறுத்தவரை யாதொரு குற்றம் குறை இல்லாமல் ஒழுங்காக நிர்வாகம் நடந்துவருவதாகக் கேள்விப்பட்டு மகிழ்ச்சி அடைந்தேன். ஆதலால் நான் இதுவரை பேசியவை மற்ற சில இடங்களில் நான் கண்ட, கேட்ட அநுபவத்தைக்கொண்டே ஆகும். தங்கள் அன்புக்கு நன்றி!

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.